



அமரர்

# ஆனந்தராசா மோகனராசா

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# "மோகன மலர்"

06.03.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருநகர், கிளிநொச்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட

அமரர்.

# ஆனந்தராசா மோகனராசா

# அவர்களின் ஓராண்டு

# நினைவு மலர்

06.03.2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

ஐங்கரன் ஈன்றமுத்து
அழகுருவம் எங்கள் சொத்து
வல்லவனாய், நல்லவனாய்
வையகத்தில் வாழ்ந்து
வாழ்வியல் இன்பத்தை
பாதியிலே துறந்து
அலைகடல் துடுப்பாக
அன்னையைத் தவிக்கவிட்டு
வாலிபமும் அழகும் நிறைந்த வாழ்க்கை
நிலையற்றது என்பதனை உணர்த்திச் சென்ற
எம் அருமைச் செல்வம்
ஆனந்தராசா மோகனராசா
அவர்களுக்கு இம்மலர் சமர்ப்பணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

மனம் மகிழ

05

11

1971



மனம் நெகிழ

06

03

2021

அமரர்

# ஆனந்தராசா மோகனராசா

அவர்களின்

## "திதி நிர்ணய வெண்பா"

சீரோங்கும் சார்வரி வருடம் 18ஆம் நாள் (06.03.2021)
அபரபட்ச அட்டமி திதி தன்னில் பாரோர் புகழும்
கிளிநொச்சிப் பதியுதித்த நல்லோன் மோகனராசா
தில்லைக் கூத்தன்தன் திருவடி சேர்ந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

## தேவாரம்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசிஎன்1 உள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தஅருள் செய்த
பீடுடையபிர மாபுரம்மேவிய பெம்மானிவ னன்றே.

## திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து உன்விரை
யார்கழற்குஎன்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி
வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய
போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேன்உடை யாய்என்னைக்
கண்டுகொள்ளே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே !
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே !
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே !
சித்தத்துள் தித்திக்கும் தேனே !
அளிவளர் உள்ளத்(து) ஆனந்தக் கனியே !
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல் லாம்விளங்க
அன்ன நடைமட வாள்உமை கோன்அடி
யோமுக் கருள்புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே

# திருப்புராணம்

ஐயும் தொடர்ந்து விழியும் செருகி அறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்று வேண்டுவன்யான்
செய்யும் திருவொற்றியூருடையீர் திருநீறு மிட்டுக்
கையும் தொழப்பண்ணி ஐந்தெழுத்தோதவும் கற்பியுமே

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீயாடும்போது உன் அடியின்கீழ் இருக்க வென்றார்.

# திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் - குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் -தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற-குமரேசா
அறநாலைப் புகல்வோனே அவிநாசிப்- பெருமாளே.

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சிறக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்யக் குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைப் பயணத்தில்....



## அமரர்
## ஆனந்தராசா மோகனராசா

சகல வளமும் நிறைந்த இலங்காபுரியில் வடபால் உள்ள யாழ்ப்பாணத்தில் சிறந்த தீவாக விளங்கும் வேலணையம்பதியில் உதித்த குழந்தைவேலு சின்னம்மா பெற்றெடுத்த ஆனந்தராசா என்பவருக்கும் நீர்வேலியைச் சேர்ந்த பரமநாதன் ஆச்சிமுத்து பெற்றெடுத்த வள்ளியம்மாவுக்கும் முதல் முதலாக 1971ஆம் ஆண்டு கார்த்திகைத் திங்கள் 5ஆம் நாள் கிளிநொச்சி திருநகரில் மோகனராசா வந்துதித்தார். அவரைத் தொடர்ந்து தாட்சாயினி, குகராசா, அரவிந்தராசா, தர்சினி ஆகிய அருமைச் சகோதரர்கள் வந்துதித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோகன், ராசன் எனும் செல்லப்பெயருடன் சகல வளங்களுடன் வளர்ந்து ஆரம்பக்கல்வியை கிளி / கனகபுரம் மகாவித்தியாலயத்திலும் 6ஆம் வகுப்பிலிருந்து வடமாகாணத்தின் பிரபல பாடசாலையில் ஒன்றான ஹாட்லிக் கல்லூரியிலும் தனது படிப்பை தொடர்ந்து நாட்டின் சூழ்நிலை காரணமான அங்கு தனது கல்வியைத் தொடரமுடியாது மீண்டும் கிளி நகரிலுள்ள கிளி இந்துக்கல்லூரியில் தனது படிப்பைத் தொடர்ந்தார். தனது வயதுக்கு மீறிய பேராற்றல் கொண்டு திகழ்ந்தவர். படிப்பில் மட்டுமல்லாது விளையாட்டிலும் சாதனையாளனாக திகழ்ந்தார்.

நாட்டில் வாழமுடியாத சூழல் ஏற்பட்டதன் காரணமாக கல்வி கற்க முடியாமல் அரும்பாடுபட்டு 1990 இல் லண்டன் மாநகருக்கு அனுப்பி வைத்தினர் பெற்றோர். லண்டனில் இரு வருடங்கள் மருத்துவத்துறையில் படித்தபோதும் உழைப்பால் உயர வேண்டும் என்ற ஆசையால் பெரும் வியாபார ஸ்தாபனத்தை ஸ்தாபித்து அதில் உயரவும் கண்டார்.

2002 இல் அவருக்கு குப்பிளானைச் சேர்ந்த சிவபாதம் தயாளினி அவர்களை திருமணம் செய்து வைத்து அதன் பயனாக அனந்திகா, அக்சயா என்ற இரு பெண்பிள்ளைகளுக்குத் தந்தையாக இருந்து பூரிப்படைந்தார்.

பள்ளி வாழ்க்கையில் பல்கலைகளுடன் ஆங்கிலக்கல்வி, விளையாட்டுத்துறையிலும் சிறந்த வீரனாகத் திகழ்ந்து வந்தார். பள்ளி நண்பர்களுடன் நகைச்சுவையாக பேசுவதிலும் அயலவர்களை அன்புடன் நேசிப்பதிலும் வல்லவனாக திகழ்ந்தார். ஆங்கிலத்தை சரளமாக பேசியதில் வைத்தியசாலை டாக்டர்களே வியக்கும் அளவிற்கும், உதாரண புருஷராக திகழ்ந்தார். உதவிகள் புரிவதிலும் இரக்கம் காட்டுவதிலும் அவருக்கு அவரே நிகரானவர். சின்னஞ்சிறார்களை சிரிக்க வைப்பதிலும் அவர்களை கவர்ந்திடுவார். ஆராரோபாடி தொலைபேசியில் அம்மம்மாவுடன் தூங்கிடுவார். செல்லமாக கதைப்பதிலும் சிரித்து பிறரை மகிழ்விப்பதும் இவரின் தனிச் சிறப்பாகும். கல்வி கற்பித்த ஆசிரியர்களை நேசிப்பதில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியுடன்



மனைவி பிள்ளைகளுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லவர். இடத்திற்கு ஏற்றவாறு தன்னை மாற்றிக்கொண்டு நடப்பதில் சிறந்தவர்.

2017இல் நோயுற்று வைத்தியசாலையில் 90 நாட்கள் சுயநினைவு இழந்து வாடியபோதும் அவர் செய்த புண்ணியத்தின் பயனால் உயிர் பிழைத்து தனது தாயாருடன் சொந்த நாட்டிற்கு வந்து தாய், தந்தையுடன் இரண்டு ஆண்டுகள் இன்பமாக வாழ்ந்தார். இரண்டு ஆண்டுகள் சென்றமையால் தனது இருப்பிடத்தை உறுதி செய்ய மீண்டும் லண்டன் மாநகர் சென்று உடன் திரும்ப எண்ணியபோதும் கொரோனா எனும் கொடிய நோய் நாட்டில் பரவியமையால் திரும்பி வர காலதாமதமாகிய நிலையில் 2021 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 6ஆம் நாள் எதிர்பாரதவிதமாக இயற்கையெய்தினார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தூங்குவது போல் சாக்காடு
தூங்கி எழுவது போல் பிறப்பு

முயற்சியை எப்போதும் கைவிடாதீர்கள். இன்றைய நாள் கடினமாக இருக்கலாம், நாளைய நாள் மிகக் கடினமாகக் கூட இருக்கலாம், ஆனால் நாளை மறுநாள் உங்கள் வாழ்க்கையை மாற்றும் புதியதொரு விடியலாக மாறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவின் உள்ளக்குமுறல்

## காலத்தின் தேவைக்காக வந்து கடமையை முடித்து சென்றாயே

கோட்டை இடிந்ததையா
கோபுரம் சாய்ந்ததையா
மாடி இடிந்ததையா
மண்டபமும் சாய்ந்ததையா

ஆவி பிரியும் வேளையிலே ஆரை நினைத்தாயையா
அம்மா என்று அழைத்தாயோ அப்பாவை நினைத்தாயோ
அம்மு, அக்ஷி என்று அலறித் துடித்தாயோ
அரவிந்தன் என்று தம்பியைக் கூவி அழைத்தாயோ
தங்கைகளை எண்ணித் தவித்தாயோ நானறியயேன்
எதுவும் அறியேன் நான் எப்படித் தாங்குவேன்
செய்தி அறிந்தவுடன் அலறித்துடித்தேன்
அடியற்ற மரமானேன் சோர்ந்து விழுந்தேனையா
பதறித்துடித்தேன் பார்மீது சாய்ந்தேன்
என்ன செய்வேன் ஏது செய்வேன்
எனை மறந்து விட்டு எங்கே நீ சென்றாய்
அப்பாவுடன் போனாயோ, தம்பியுடன் சேர்ந்தாயோ?
அத்தான், அம்மம்மாவுடன் அருகில் இருப்பாயோ?
அமைதி அடைந்து ஆண்டவன் அடி சேர்ந்திடையா.

-அம்மா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய், தந்தை, சகோதரர்களுடன்



## பிள்ளைகளுடன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமணத்தின்போது



## பிள்ளையின் பூப்புனித நீராட்டு விழாவின்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவி பிள்ளைகள்

அப்பா என்று சொல்ல
யார் எமக்கு இங்குள்ளார்
வையகத்தில் நாம் வாழ
வழி சமைத்த அப்பாவே!
எமைப் பிரிந்து நீங்கள் வாழ்ந்த நாளை
எண்ணியே பார்க்கிறோம் சிந்தையிலே
இரண்டு பெண் பிள்ளைகள் நாங்களென
இறுமாப்புடன் வாழ்ந்தோம் உங்களுடன்
காலம் செய்த கோலமோ என்னவோ
உங்களைப் பிரிந்து வாழவிட்டான் ஆண்டவன்
உங்களை எண்ணாத நாளில்லை அப்பா
பள்ளியிலே நாங்கள் படித்த நாளை
எண்ணியே பார்க்கிறோம் உங்களை நினைவில்
என் பிள்ளைகள் கெட்டிக்காரர் என
இறுமாப்புடன் கூறிடுவீர் எல்லோர்க்கும்
இன்று எங்களுடன் நீங்கள் இல்லையப்பா
நித்திய நித்திரைக்குப் பின் உங்கள் சேதிகேட்டு
நிலைகுலைந்தோம் நாங்கள் அப்பா
தாத்தா வந்து உங்களின் கடமைகள் அனைத்தும்
செய்த நாளை எண்ணிப் பார்க்கிறோம் நெஞ்சமதில்
நீங்கள் நித்திய நித்திரை கொண்டாலும்
நினைத்திருப்பீர்கள் எங்களை நெஞ்சமதில்
உங்கள் ஆசி எங்களிற்கு என்றென்றும்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொர்க்கத்தில் உறங்கண்ணா!

ஆணழகனாய் குடும்பத்தில் உதித்தவரே!
அன்புக்கும் பண்புக்கும் இலக்கணம் ஆனவரே!
உங்கள் பாசம்கண்டு மகிழ்ந்திருந்தோம்
நாம் வைத்த பாசத்தால் விம்மித் துடிக்கின்றோம்.

ஒருபோதும் கோபத்தை உங்கள் முகத்தில் கண்டதில்லை
ஓராயிரம் பிறப்பு எடுத்தாலும் எங்கள் பாசம் மாறாதண்ணா
மூத்த முத்தென்று அப்பா அம்மாவும்
முதல் பேரன் நீயென்று அம்மம்மா அம்மப்பாவும்
மூத்த உடன்பிறப்பு என்று நாங்களும்
பெருமிதம் கொண்டு பேணி வளர்த்தோம்
காலம் செய்த கோலத்தால் அந்நியதேசத்தில்
உழைத்தாய், உயர்ந்தாய், உயிரையேன் துறந்தாய்?

நாமெல்லாம் உன்னருகில் நின்று கடமை செய்யவில்லை
பாவியராய் நின்று பரிதவிக்கச் செய்ததுமேன்
மாமன்மார் நால்வர் தோளில் ஊர்வலம் சென்று நீயும்
ஏதிலியாய் ஏங்க வைத்து எங்கோடி மறைந்தாயோ?

ஒன்றாகப் பள்ளி சென்று துள்ளி விளையாடினோமே!
பருத்தித்துறை சென்றும் ஒன்றாகவே இருந்தோம்
ஆங்கிலத் திறமை கண்டு ஆங்கிலேயனே அசந்திடுவான்
ஒன்றாகவே இருந்தும் சண்டையிட்டு நாமறியோம்

சிங்கப்பூர் தேசம் சுற்றிக் காட்டி வந்தாய்
நகை வாங்கிப் பூட்டி பூரித்து மகிழ்ந்து நின்றாய்
எம் வாழ்வின் வசந்தமாய் நீயிருந்தாய் நாம் மறவோம்
தந்தையுடன் நீயுறங்க சொர்க்கத்தில் தானுறங்கு.

அன்புடன் தங்கை ஆனந்தி குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு ராசனுக்கு...

அன்பு ராசன் நீங்களும் எனக்கு
இளையவனாக இருந்தாலும்
குடும்பத் தலைவனாகவும் எனக்கு
தோளோடு தோள் நின்றுடுவீர்
தங்கையின் கணவன் என்றில்லாமல் - எனை
தந்தையை மதிப்பது போல்
புஸ்பண்ணா என்று மதித்திடுவீர் அனுதினமும்
எம்பிள்ளைகளும் மாமா மாமா என
ஏம்பலித்தே தவிக்கின்றனர்
அபிநயா என்றால் உங்களிற்கு
ஆனந்தமே பொங்கிடும்
குபேரன் பெயர் சொன்னால் - உங்கள்
தோள்களும் உயர்ந்து நிற்கும்
ஆதவன் முகம்பார்த்தால் நீங்கள்
ஆதங்கமே கொண்டு நிற்பீர்
மாமாவைப்போல் திறமையுள்ள
தரணி போற்றும் சீராளன்
இங்கில்லை என்பார்கள்
மாமாவைப் போல சிறந்து
பார்போற்ற வாழவேண்டும் என்பார்கள்.

தங்கை புஸ்பாகரன் தாட்சாயினி
குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பி அரவிந்தன்

ஆருயிர் அண்ணாவே!
அன்பான தெய்வமே!
அப்பாவும் அம்மாவும்
ஐந்து பேரை பெற்றெடுத்து
தாலாட்டிச் சீராட்டி வளர்த்தனரே!
முதல் முத்து நீங்கள் அண்ணா!
முன்னின்று வழிகாட்டி எமை
முன்னேற்றி வைத்தீர்கள்
ஈரெட்டு வயதினிலே
ஏகிவீட்டீர் வெளிநாடு
அம்மா, அப்பா, தங்கை , தம்பிகளை
ஏணிப்படிதனில் ஏற்ற எண்ணி
இலண்டன் மாநகரம் சென்றவேளை
தம்பியான என்னையும் சின்னஞ்சிறு வயதினில்
சீராட்டி சீர்தூக்கி விட்டீர்கள் வெளிநாடு
ஆங்கிலத்தை சரளமாக பேசுவீர்கள் எம்முன்னே
தம்பியான என்னையும் வழிகாட்டியே வைத்தீட்டீர்
அண்ணா என்ற சொல்லுக்கு இலக்கணமே நீங்கள்தான்
சின்னண்ணா உடனிருந்தால் உங்களிற்கு தோள்
கொடுத்திருப்பான்
அண்ணா நாங்கள் கொடுத்து வைக்கவில்லை அண்ணா
அண்ணா நீங்களும் சின்னண்ணாவும்
பொறுப்புக்கள் யாவும் நீயே என்று - எனை
சுமைதாங்கி ஆக்கிவிட்டீர்கள்
நிலைகுலைந்தே நானும் நிற்கின்றேன் லண்டனில்
தலைமகன் நீங்கள் இன்றி
தவிக்கிறேன் இங்கிருந்து
என் பிள்ளைகளை பிரியமுடன் பார்த்தீர்கள்
மனைவி சாஸ்கூட அளவிலா அன்பு காட்டினீர்கள்
எந்தக்காரியம் ஆனாலும்
எளிதினில் செய்து முடிப்பீர்கள் அண்ணா
எந்தப்பாரமும் உங்களிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமையாக இருப்பதில்லை அண்ணா
சிரிப்பொன்று சிரித்துவிட்டு
செய்து முடிப்பீர் நீங்கள் அண்ணா
அப்பா, அம்மாவுடன் இரண்டு ஆண்டுகள்
அகமகிழ்ந்து இருந்தவேளை
அரவிந்தன் நானும் இங்கு
தனியேதான் இருந்துவிட்டேன்
எம்தொழில் சிறப்புற நீங்கள்
இனிதே வழிகாட்டி நின்றீர்
நீங்கள் லண்டனில் நோயுற்றபோது
கலங்கியே தவித்தோம் நாம்
அம்மா லண்டன் வந்தவுடன்
கண்விழித்தே அசைவு காட்டினீர்
ஆண்டவன் உங்களை காப்பாற்றியே தந்துவிட்டான்

அண்ணா நீங்கள் எமைப்பிரிந்து
ஆண்டொன்று சென்றதண்ணா
அப்பாவுடன் நீங்களும்
அமைதியாகி விட்டீர்கள் அண்ணா
அரவிந்தன் நான் இங்கிருந்து
அலறியே துடிக்கிறேன் உங்கள் பிரிவால்
எத்தனை வேதனைகள் எம் மனதில் அப்பா
சித்தப்பா, அத்தான், அம்மம்மா , பெரியப்பா என
எத்தனை பேரை பிரிந்தோம் அண்ணா
அண்ணா நீங்கள் இங்கிருந்தால்- எம்
மனம் ஆறுதல் அடையுமண்ணா
மறுபிறவியெடுத்து நீங்கள் எம்
குடும்பத்தில் வருவீர்கள் அண்ணா

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

- தம்பி
அரவிந்தன் குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு பெரியண்ணாவிற்கு!

இளமைப்பருவத்தில் நாங்கள் பிரிந்து வாழ
நாட்டுச் சூழல் காரணமாகிப் போக
மீண்டும் இணைந்திருந்த காலங்கள்
ஆதாரமாகிப் போனதை எப்படியண்ணா மறப்போம்
அறியாத பருவத்திலேயே நீங்கள் சிங்கப்பூர்
சீமையைச் சுற்றிக்காட்டி
பொன் எமக்கு பூட்டி அழகு பார்த்ததை
எப்படியண்ணா மறப்போம்

மூத்தவராய் அவதரித்து
எல்லோருக்கும் செல்லக்குழந்தையாக
கடைசிவரை வாழ்ந்தீர்கள்
உங்கள் பிரிவினை ஏற்க மறுத்தோ
கிளைபரப்பி விழுதெறிந்து நின்ற
பெருவிருட்சம் எங்களப்பா
அமைதியாக நீள் துயில் கொண்டாரோ

இறைவன் எம்மை இடி தாங்கியாக எண்ணி
என் வாழ்விலும் பூவைப்பறித்து பொட்டழிந்து
புனிதமான தாலியையும் பறித்து
என் இனியவரைத் தனக்கென்று அழைத்துச்
சென்ற கொடூரத்தை தாங்கமுடியாது
வருகின்றேன் தாய்நாடு
வாழ்ந்திடுவேன் உனக்குத் துணையாக என்று கூறினீர்கள்
உங்களின் மூச்சையும் காலனவன் கவர்ந்து சென்றதை
ஏற்க மனம் மறுக்குதண்ணா.

தங்கை யசோதரன் தர்சினி குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எப்பிறப்பில் காண்போம் அன்புச் சகோதரனே!

ஆண்டொன்று ஆனதைய்யா ஆறவில்லை எம்துயரம்
தாய்க்கு தலைமகனாய் தரணியிலே அவதரித்த
அருமைச் சகோதரனே!
அன்பு பாசத்தில் ஒளிவிளக்கே
கல்வியில் மேலோங்கி உயர்ந்தவனே!
துன்புற்றோர் துயர் துடைத்தவனே!
உதவிக்கரம் நீட்டியவனே!
நற்குணம் கொண்டவனே !
ஊர்போற்றும் உத்தமனே !
ஒளிதரும் விளக்காய் இருந்தவனே!
புன்னகை முகம் கொண்டவனே!
பூத்துக்குலுங்கும் சிரிப்பு அழகனே!
கடவுள் ஏன் தான் இடைநடுவில்
பறித்துவிட்டானோ தெரியவில்லை
உங்கள் ஆத்மா இறைவன் பாதத்தில்
சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

-பெரியப்பா குடும்பம் , கனடா

## பெரிய மாமாவின் உள்ளத்திலிருந்து...

அன்புடனே அடிபட்ட அக்காவின் மருகன்
ஆசையுடன் அரசாண்ட ராசனின் ஒருவன்
அந்த நாள் என் நெஞ்சில் விளையாடிய ஒருவன்
அன்பிற்கும் அகமகிழ்விற்கும் பண்பிற்கும் ஒருவன்
எல்லாமே எமக்களித்த இணையில்லா ஒருவன்
இன்றில்லை எம்முடன் என்றாலும் என்ன
என்றென்றும் எம்முள்ளே உறங்குகின்ற மருமகன்
அன்புள்ள ராசா மோகன் தான் அவரே.

- பெரிய மாமா
சந்திரன் குடும்பம், லண்டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் ராசனுக்கு....

அன்பும் பாசமும் நிறைந்து சகோதரனாய்
எங்களோடு வளர்ந்த நீர்
இன்று எங்களை விட்டு விட்டு
அவசரமாகச் சென்றதன் காரணம் யாமறியோம்
சிறுவயதில் இருந்து பாசமாய் விளையாடிய நாட்களை
எண்ணிப் பார்க்கிறோம்
சின்னப்பாவின் இழப்பையே
எங்களால் தாங்க முடியவில்லை
நீர் அவசரமாக அப்பாவைப் பார்க்க சென்று விட்டீர்
உம் பிரிவை நினைத்து
உன் உயிர்கள் எல்லாம் துடிக்கின்றது
உனக்குக் கேட்கவில்லையா?

காலத்தின் கொடுமையை எண்ணி கலங்கி நிற்கின்றோம்
உன் பிரிவை நினைத்து கலங்கி கண்ணீர் விட்டு
நிற்கும் உனது

ஆசையம்மா
செல்வி அக்கா, வாணி அக்கா, ரவி, மதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதை மயக்குமாம் மோகனராகம்....

உன் அன்பால் எம்மைக் கவர்ந்தவன்
ஐயா நீ மோகனராசா
ஏன் இந்த அவசரம் எம்மைவிட்டுப் போக
நீ அன்புநிறைய எங்களை அழைக்கும்
சீனியப்பா, சீனியம்மா, அக்கா
இன்னும் எங்கள் காதுகளில் கேட்பது
போலொரு பிரமை
ஏனய்யா உனக்கு இந்த அவசரம் எமைப்விட்டுப் போக
இளம் குருத்துக்களாக எமது தம்பியரை
காலனுக்கு கொடுத்து விட்டு
அழுதுகொண்டிருக்கின்றோம் நாமெல்லாம்
இப்போது உன்னையும் எங்களிடத்தில்
இருந்து பிரித்து விட்டானா அந்தக்காலன்
உன் இழப்பை நினைக்க நினைக்க
நெஞ்சு வெம்புகிறது.
ஏன் இந்த அவசரம் உனக்கு
அழகன் நீ, அன்பானவன் நீ,
நீ மற்றவர்கள் மனம்நோகப் பேசியதை
நாங்கள் பார்த்ததில்லை
ஆனால் உன்னை இழந்து இப்போது மனதிற்குள் துடிக்கிறோம்
ராசன் உண்மையிலே எங்களை
விட்டுப் போய் விட்டானா என்று தடுமாறுகின்றோம்
ஏனைய்யா உனக்கு இந்த அவசரம்
உன் பிரிவால் தவிக்கின்றோம்.
உன் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

- சீனியப்பா குடும்பத்தினர், கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமா இராமச்சந்திரன் நினைவில்

சேற்றிலே மலரும் செந்தாமரை
சிப்பியுள் தோன்றும் முத்து ஆனால் நீயோ
வானத்தில் பூத்த வைகறை வெள்ளி
ஞாலத்தில் வந்துதித்த எங்கள் குலவிளக்கு
ஆனந்தன் வள்ளியின் முதல் சொத்து
ஆனந்த ஞானமே உன் வாழ்வு

என்னைப்போல் மூக்குனக்கு என்பா வள்ளி
என் குணங்கள் பற்பலவும் உனக்குண்டு
ஆழமான நதியைப் போல் அமைதியும் அறிவும்
உன்னிடம் குடி கொண்டிருப்பதைக் கண்டேன்
திரைகடல் தாண்டினாய் திரவியம் தேடிட
எவ்விடம் சென்றாலும் எம் நினைப்போடு தானிருந்தாய்

வெளிநாட்டில் இருந்தாலும் அடிக்கடி போன் எடுத்து
என்மாமா நீங்கள் தான் நலம் தானா எனக் கேட்பாய்
வருத்தம் ஏதும் நான் சொன்னால்
வைத்தியன் போல் மருந்து சொல்வாய்
இனி எனக்கு நீயும் எங்கிருந்து போன் எடுப்பாய்
மாமா என்பதை விட மாஸ்ரர், பிறின்சிப்பல் எனக் கதைப்பாய்
ஆங்கிலத்தில் தான் அதிகமாய் கதைப்பாய்
அமிழ்தனைய உன் வார்த்தைகளை
இனியெப்போ நான் கேட்பேன்

கடந்து போன உன் வாழ்வு கனவாகிப் போனாலும்
எம் கண்முன்னே உன் கனிந்த முகம்
எவ்விடமும் தெரியுதடா எந்நாளும்
ஆதலால் உள்ளம் எரியுதடா எந்நாளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனந்தியும் அக்ஷியும் அழுது புலம்புகிறார்கள்
ஐயா உன் செவியில் அனுதினமும் கேட்குமே
குரல் கேட்ட பின்பேனும் குளிர் நிலவாய் வந்திடடா
ஆனந்தியும் தங்கமும் அண்ணா அண்ணா என்று
ஆற்றாது நித்தம் அலறுவதைக் கேட்டு
அனுதினமும் பதறுதடா
மோகப் புன்னகை சிந்தியே
ராசா நீ வந்திடடா

மாமா
இராமச்சந்திரன் குடும்பம்

## சித்தப்பாவின் இரங்கல்

கண்ணிமைக்கும் பொழுதினிலே
காலனவன் வென்றுவிட்டான்
வாழ்ந்தகாலம் போதுமென்று
பாதியிலே கவர்ந்துவிட்டான்
சாவணைக்கும் வயதில்லை - நீ
எம்மைவிட்டு போனதேனோ! பெறாமகனே
உன்முகம் இனி எங்ஙனம் காண்போமோ....
புண்பட்ட நெஞ்சுடன் புலம்பி நாம் அழுகின்றோம்
பூவுலகு நீங்கி விண்ணுலகம் சென்றதேனோ....

குஞ்சி அப்பா,
சிவராசா குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்மனியிலிருந்து மாமனின் ஆதங்கம்

அனந்திகாவை முதல் பெண்ணாய்க் கண்ட மருகா
ஆண்டொன்று ஆனதா மருகா
இல்வாழ்க்கை இவ்வுலகில் கசந்ததா மருகா
ஈரைந்து மாதங்கள் சுமந்தவளையும் மறந்தாயோ
உனது லண்டன் பயணத்தால் தந்தையின் நெஞ்சு வலித்ததோ
ஊரெல்லாம் உறவுகள் தேடுதடா உன்னை
என் பிள்ளைகளை அத்தான் என்று கூறென்று அதட்டினாயே
ஏங்கித் தவிக்கின்றனர் மச்சான், மச்சாள்மார்
ஐங்கரன் ஸ்ரோர்ஸ் அழிந்தும் மீண்டும் புத்துயிர்
கொடுத்தாயோ
ஒவ்வொரு நாளும் சாமத்தில் இன்றும் கணீரென்று
ஒலிக்குதடா உனது ரெலிபோன் மணி

ஓரிரவு மட்டும் ஒலிக்க மறந்தது அந்த ஒலி
ஒளவியங்கள் பல உனது உடல் கண்டாலும்
அஃதும் காலனுக்கு பொறுக்கவில்லை
ஆண்டொன்றானாலும் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உன் பிரிவில்
தனம் மாமா, மாமி, மச்சான், மச்சாள்மார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமகனின் இறுதிக் கணத்தில் மாமா

சிறு வயதிலேயே சீமைக்கு நீ வந்தாய்
நீ சிறப்பாய் வாழ்வதற்கென்றே நாம் நினைத்தோம்
சிறப்பாய் நீ வாழ்வதற்கல்ல
உற்றார், உறவினர் , நண்பர்கள் , அயலவர்கள்
தெரிந்தவர், தெரியாதவர்களின் வாழ்க்கையை
சிறப்பாக வாழ வைப்பதற்கே

கடினமாய் உழைத்தாய் காசுதனையும் சேகரித்தாய்
அக்கறையாய் நீ இருந்ததனால்
அனைவரையும் அழைத்தாய் உன்னிடத்தே
வெளிநாட்டு வாழ்க்கை என்பது
மரத்தில் காசு பறிப்பது அல்ல
என்று நான் கூட உணர்ந்தது உன்னால் தான்
வெளிநாடு வந்து வாழ்க்கை
வாழும் போது தான் எல்லாமே புரிந்தது.

நம் குடும்பத்தை நாம் பாதுகாக்க
எவ்வளவு கடினமாய் உழைக்க வேண்டி இருக்கின்றது
உன்னால் மட்டும் எப்படி சாத்தியமானது
இவ்வளவு குடும்பத்தின் வாழ்க்கையையும்
வளம் பெற வைப்பதற்கு
நீ எவ்வளவு பாடுபட்டிருப்பாய்
என்று நானும் வியந்திருக்கின்றேன்.

இல்லை என்ற வார்த்தைக்கு அர்த்தம் தெரியாதவன் நீ
கேட்டவர்களுக்கெல்லாம் வாரி வழங்குவாய்
கர்ணனை காவியத்தில்த்தான் படித்திருப்பார்கள் பலர்
ஆனால் நான் அக்கர்ணணை உன் உருவத்தில் கண்டவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் அக்கா வயிற்றில் பிறந்தவன் நீ
உன்னை நானல்லவா பாதுகாத்திருக்க வேண்டும்.
என் அக்காவின் வயிற்றில் மறுபிறவி எடுத்துவந்த என்
தந்தைதானே நீ
ஆதலால்த்தான் என்னை வளம்பெற செய்தாயோ?
தர்மம் தலைகாக்கும் என்பர்
அப்படி என்றால் ஏன் உன்தலை காக்கவில்லை
இல்லை உன் தர்மம் தலை காத்தது
உனது உடல் செயலிழந்து போனபோது
உன்னை மீண்டும் மறுபிறவி எடுக்க வைத்தது

இரண்டு வருடங்கள் உனை வாழ வைத்தது
ஆனால் மறுபடியும் உன்னை ஏன் காலன் அழைத்து சென்றான்
நீ செய்த தர்மம் போதாமல் போனதாலா
இல்லை நீ செய்த தர்மம் உன் ஆயிரம் தலைமுறைக்கு
மீதமானது
அக்காலனும் கண் கலங்கி இருப்பான் உன்னை
அழைத்துச்செல்லும் போது
நீ வெறும் கர்ணன் அல்ல நீ அந்த இறைவனின் மறு உருவம்
இறைவனின் மறு உருவம் இவ் உலகில் நீண்ட
காலம் தங்குவதில்லைத்தான்
அதனால்த்தான் நீ இச் சிறுவயதிலேயே சென்றிருக்க வேண்டும்
நான் இவ்வாறு எல்லாம் எனக்கு எவ்வளவு ஆறுதல்
சொன்னாலும்
என் மனம் பொறுக்கவில்லை ஐயா!
நீ நிம்மதியாய் உறங்கு
எக் கடமையிலிருந்தும்
கதி தவறியவன் இல்லை
என்றும் நினைவுடன்

பூபால் மாமா, மாமி,
மச்சாள்மார், மச்சான் குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குஞ்சன்ரி, சித்தப்பா குடும்பத்தின் உள்ளத்தில் இருந்து...

எங்கள் குடும்பத்தின் தலைமகளிற்கு
வந்துதித்த முதல் முத்து எங்கள்
ராசன் அழகாலோ அறிவாலோ
எல்லாவற்றிலும் சிறந்தவன் நீ
படித்து பட்டம் பெறாத வைத்தியர்
என்னுடைய செல்வமகன்.
உனது ஆற்றலை சொல்ல வார்த்தைகள் இல்லை ஐயா!

உன்னுடைய 49 வயதிலும் எங்களுக்கு நீ செல்லக் குழந்தை. என்னுடைய பிள்ளைகள், பேரப்பிள்ளைகளிற்கு அண்ணா, பெரியப்பா, மாமா என்றால் அளவு கடந்த பிரியம் சிந்துவின் மனைவி உன்னை எப்போதும் குறை சொல்லமாட்டாள்.

உடன் பிறந்த சகோதரனைப் போல கவனிப்பாள்
அப்படியான தங்க மகன் எங்கள் மோகனராசா
அப்பு நீ இன்றும் வெளிநாட்டில்
இருப்பதாகவே எண்ணுகின்றோம்.

எங்கள் எல்லோருடைய மனதிலும்
ஆறாத வடுவாய் வாழ்ந்து கொண்டிருக்கும்
முதல் பேரக்குழந்தைக்கு சமர்ப்பணம்

என்றும் உன் நினைவில்
(அன்ரி, சித்தப்பா குடும்பம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிய தாய்மார் உள்ளக்கிடக்கை

அள்ளி அணைத்து முத்தமிட
ஆயிரத்து தொளாயிரத்து எழுபத்தொன்றில்
அக்காவின் மூத்த முத்தாய்
அவதரித்தான் மோகனராசா

சின்ன வயதினில் கிள்ளைமொழிபேசி
ஆனந்தமாய் எங்கள் அத்தானின்
நெஞ்சினிலே படுத்துறங்கி
நேசமுடன் வளர்ந்து வந்தான்
எங்கள் பிள்ளைகளை தன்
தங்கைகள் தம்பிமார் என எண்ணி
தரணிபோற்றும் தலைமகனாய்
கல்வியிலே சிறந்த பேராளனாய்
கலைகள் பல பயின்றான் D7 பள்ளியில்

சிறிய தாய்மார் என்றில்லாமல்
எம் மடியில் படுத்துறங்கி
எனக்கு அன்ரிமார் எல்லோரும் அம்மா தெரியுமா என்பான்
பெரியன்ரி, ஆத்தை அன்ரி, குஞ்சன்ரி என
செல்லமாய்க் கொஞ்சி விளையாடுவான்

ஈரெட்டு வயதளவில் நாட்டுச் சூழ்நிலை தலைதூக்க
ஏகினான் லண்டன் மாநகரம்
லண்டனில் இருந்து கொண்டே
அம்மம்மாவுடன் செல்ல மொழிபேசி
ஆராரோ பாடி நித்திரை கொண்டிடுவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைபேசியில் கதைபேசி
பழங்கதையெல்லாம் கூறிடுவான்
அம்மம்மாவோடு பழைய கதையை
ஒவ்வொரு நாளும் கூறிடுவான்
எங்கள் பிள்ளைகள் யாவரையும்
தன் சகோதரர் என எண்ணி
பற்றுப் பாசத்துடன் சொந்தம் கொண்டிடுவான்

கடைசிக்காலம் ஒன்றரை ஆண்டுகள்
எமையெல்லாம் தோளில் தட்டி
மடியில் படுத்து கன்னத்தில் முத்தமிட்டு
எனக்கென்ன குறைச்சல்
என்னுடைய அன்ரிமார் இருக்கும் வரை என்பான்

ஆணழகன் மோகன வதனன்
குலக்கொழுந்து ஆயிரத்து தொளாயிரத்து இருபது
பங்குனி ஆறுதனில் படுக்கையில்
நித்திய தூக்கமானான்.

- பெரிய அன்ரி,
ஆத்தை அன்ரி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் ராசனுக்கு...!

என்றும் புன்னகை பூத்தமுகம்
எல்லோரையும் அன்பாக வரவேற்கும் தன்மை
"இதெல்லாம் சின்னப் பிரச்சினை செய்யலாம்" என்ற
நம்பிக்கையூட்டும் வார்த்தைகள்
மற்றவர்களது பிரச்சினைகளுக்கு ஆறுதல் கூறும் பக்குவம்
தன்னலமற்ற மற்றவர்களுக்கு உதவி செய்யும் மனப்பாங்கு
எவ்வளவு நாட்கள் கடந்தாலும் நேற்றுவரை
ஒன்றாக இருந்தது போன்று உரிமையுடன்
அரவணைத்து பேசும் தன்மை
எந்தவொரு சிக்கலான பிரச்சினையையும் சாதுரியமாக
கையாளும் அறிவுத்திறன்
" ராசன் நீ என்றும் என் நினைவில் இருப்பாய்"

- சிவகுமார் அண்ணா, லண்டன்

# நண்பன் மோகனுக்கு சமர்ப்பணம்

நண்பனே! என் பிள்ளைகள்
அன்புடன் ஆனந்தமாக அழைக்கும் மாமா
என் மனைவியின் ஆருயிர் சகோதரா
எப்படி எம்மைவிட்டுப் பிரிந்தாய்
எப்படி பிரிக்க இயேசப்பாவுக்கு முடிந்தது
70 நாட்கள் அறிவு நினைவின்றி கிடந்தபோது
ஒரு நாள் கூட உன்னைப் பார்க்காமல் நான் இருக்கவில்லை
இயேசப்பா இயேசப்பா என்று எல்லோரும் கூவி அழைத்து
உன்னை எழுப்பி வைத்தோம்
இப்போ ஏன் என்னை அறியாமல் ஓடி விட்டாய்
ஒருகணம் கூட உன்னை மறக்க முடியவில்லை
அன்பு மோகனே இயேசப்பாவுடன் ஆறுதல் அடையப்பா

- நாதன் குடும்பம் , லண்டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடன் பிறவா சகோதரா...

தலைமகன் அண்ணனவன் எங்கள்
எல்லோருக்கும் அண்ணனவன்
மோகனராசா என்றாலும் அவன் எங்களின்
ராசன் அண்ணாதான்

அண்ணனாய் தம்பியாய் பலவேடம் கொண்டு
தரணிபோற்றும் பெரு மகனாய்
உலா வந்தான் எங்கள் முற்றத்தில்
அண்ணன், தம்பி, தங்கை , அக்காமாரோடு
ஓடி ஆடி திரிந்த நாளை எண்ணிப்பார்க்கின்றோம்
கட்டி அணைத்து என்னடா செய்கிறாய்- என
கிள்ளை மொழியில் சிரித்தே கதை சொல்வாய்
தங்கைமார் என்றால் அலாதி அன்புனக்கு
எடி என்று கதைப்பது உனக்கு ஆசை
ஓடவிட்டு அடித்துக்கலைத்து
கதை சொல்வாய் எம்மிடத்தில்
அண்ணா என்ற சொல்லுக்கு
அர்த்தம் சொன்னாய் நீ எமக்கு
கடைசி வரை சொன்னாய்
உழைத்துத் தருவேன் உங்களுக்கென்று
மூச்சின்றி பேச்சின்றி லண்டனில்
நோயுற்ற நாளை எண்ணிப்பார்க்கிறோம்
நேர்த்தி வைத்தோம் கடவுளுக்கு
நோய்மாறி வரவேண்டும் என்று

நோய் மாறி நீயும் மீண்டும்
வந்தாய் பிறந்த வீட்டிற்கு
ஒன்றரை ஆண்டுகள் அண்ணா
எங்களுடன் உறவாடி வீட்டில் நின்றாய்
பெரியம்மா, பெரியப்பாவுடன்
உணவு உண்டு மகிழ்ந்திருந்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லண்டன் விசா முடிவுறாமல் இருக்க எண்ணி
மீண்டும் சென்றாய் அண்ணா லண்டனுக்கு
கொரோணா செய்த கொடுமையால் மீண்டும்
நாடுவர எண்ணி ஏற்றிவிட்டாய் தடுப்பூசி
தடுப்பூசி செய்த கொடுமையோ என்னவோ
உங்கள் உயிர் நித்திய நித்திரையாச்சு.

- தம்பி, தங்கைகள்

## மோகன புன்னகையாளன்...

பிறந்த பயன் யாதென அறிந்து வாழ்ந்து முடித்த
என் உடன் பிறவா சகோதரனே!
மோகன் உனக்கோர் இரங்கல் செய்தி நானெழுத
என் கரங்கள் மறுக்குடா, அக்கா என என்னை அழைத்து
என் கதவு திறந்த அந்த நாள் இன்றுபோல்
எனக்குத் தோன்றுதடா
மாசு, மறுவற்ற மனிதநேயம் கொண்ட மானிடன் நீ
எப்படி இவ்வளவு விரைவில்
இந்த உறவுகளை விட்டுப்பிரிந்தாய்
காலத்தின் தேவையறிந்து உன் அன்னை , தந்தை
சோதரர்களைப் பிரிந்து வெளியூர் புறப்பட்டு
உறவுகளுக்காய் உழைத்து
அவர்களை உயர்த்திய உத்தமன் நீ
இருந்தும் ஊர் கண்பட்டது போல் ஆங்காங்கே
சோகங்கள் உன்னை சூறையாடியதை யாமறிவோம்
தந்தைசொல்மிக்க மந்திரம் இல்லை
என்பதை உணர்ந்து தந்தைக்கு அடிபணிந்த தனையனே!
வாயும் கண்ணும் சேர்ந்து சிரிக்கும் உன் வதனம் என்று
மறப்போம் நாம். அன்பின் தம்பி ஆனந்தத்தோடு அங்கிரு
அந்த ஐங்கரனும் துணையிருப்பான்.

அக்கா : பா.சுரமஞ்சரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் ராசன் அண்ணாவிற்கு...

கனவோ கலையுது கண்ணிரெண்டும் கலங்குது
பிரிந்த அண்ணனை எண்ணித்தான்
இந்தப் பிஞ்சு மனசு ஏங்குது

பாசம் உலாவிய உன் கண்களும் எங்கே
பாய்ந்து துளாவிய உன் கைகளும் எங்கே
ஆறடி ஆலமரம் அடியோடு சாய்ந்ததும் எங்கே
உன் பாசத்தை தேடி தங்கையோ இங்கே

உன் பிறப்பையும் நான் காணவில்லை
உன் இறப்பையும் நான் காணவில்லை
நீ வாழ்ந்தபோது காட்டிய பாசம் மட்டும்
நினைவுடன் இருக்கிறது, எம்மை விட்டு
எங்கு சென்றாய் அண்ணா

ஜனனமும் பூமியில் புதியது இல்லை
மரணத்தை போலொரு கொடியதும் இல்லை
இரண்டும் இல்லாவிடில் இயற்கையும் இல்லை
அண்ணா உம்மைப்பிரிந்த துயர் இன்னும்
ஆறவும் இல்லை

மீண்டும் ஓர் ஜனனம் எனக்கிருந்தால் உன் கூடவே
பிறந்திட எண்ணுகின்றேன் அண்ணா

பிரிந்ததுயர் தாங்காமல்
உன் தங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் ஊர் உறவொன்று மாயமாய் போனதோ

மோகன் அண்ணாவுடன் ஒரே ஊரில் பிறந்து ஒரே பாடசாலையில் படித்த உறவுகளாய் வாழ்ந்த காலங்கள் என்றும் மறக்க முடியாது. அதுமட்டுமல்லாமல் அவரது தங்கை எனது உற்ற பள்ளித்தோழி. இதனால் எமது உறவுகள் வலுப்பெற்றது. எமது குடும்பமும் நாட்டுச் சூழலில் மோகன் அண்ணை வாழ்ந்த லண்டன் மாநகருக்கு செல்லவேண்டி ஏற்பட்டது. அந்த வேளையிலே எம்மை மோகன் அண்ணாவும், தம்பி அரவிந்தனும் மொழி தெரியாத எமக்கு வழிகாட்டி எம்பிள்ளைகளை பாடசாலையில் சேர்த்து சிறிது காலம் பாடசாலைக்கும் அழைத்துச் சென்றார்கள்.

மோகன் அண்ணாவின் ஆங்கிலப் புலமைக்கு ஈடுஇணை இல்லை. லண்டனில் பிறந்தவர்கள் போல் ஆங்கிலம் பேசுவார். எந்தச்செயலில் இறங்கினாலும், வெற்றியுடனே திரும்புவார். நோயென்று சொன்னால் மருத்துவராக இருந்து மருந்து கூறுவார். எனது கணவனை உதயண்ணா என்று அழைத்து சொந்த சகோதரனைப் போல் இருவரும் எல்லா இன்ப துன்பங்களையும் ஒவ்வொரு நாளும் தொலைபேசியில் பகிருவார்கள்.

எமது பிள்ளைகளும் மாமா என்று மிகுந்த பாசமாக இருந்தார்கள். எமது குடும்பத்தில் பிறந்தநாள் என்றால் மறக்காமல் முதலாவதாக வாழ்த்து தெரிவிக்க மறக்கமாட்டார். அதை நினைத்து எனது பிள்ளைகள் கடந்த பிறந்தநாட்களில் மனம் வருந்தினார்கள். கடந்த வருடம் பங்குனி 6ஆம் திகதி மோகன் அண்ணாவின் போன் ஒன்லைனில் இல்லையென்று எனது கணவர் கேட்டார். அதை நான் பொருட்படுத்தவில்லை. நாமும் மாமாவும் வைத்தியசாலை சென்றபோது தான் தெரிந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் நிரந்தரமாக நித்திரைக்குச் சென்றதை எங்களால் நம்பமுடியவில்லை. எங்கள் குடும்பமே தாங்க முடியாத வேதனையில் இருக்கின்றோம். நீங்களும் தம்பியும் லண்டன் மாநகரில் எம்மை ஆதரித்ததை மறவோம். எனது பிள்ளைகள் உங்கள் மாமாவுடன் சேர்ந்து உங்கள் இறுதிக்கடமைகளை நிறைவேற்றி வழி அனுப்பிவைத்து ஆற்றாத வேதனையில் உங்கள் படத்தை வைத்து வணங்குகின்றார்கள் அண்ணா.

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

- உதயண்ணா , மாலா, பிள்ளைகள்
லண்டன்

பிள்ளைகளுடன்...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

*"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செந்நன்றி கொன்ற மகற்கு"*

எங்கள் குலக்கொழுந்து வம்ச வழித்தோன்றல் மூத்த முத்து ஆனந்தராசா மோகனராசா அவர்களின் மறைவுச்செய்தி கேட்டு ஓடிச்சென்று பார்த்து கையேற்ற எங்கள் சகோதரர்களுக்கும், மாலா குடும்பத்தினருக்கும் நான்கு வருடங்களுக்கு முன் நோயால் வாடியபோது பார்த்து ஆறுதல் கொடுத்து உதவிகள் புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் , அயலவர்கள் அனைவருக்கும் லண்டனில் அவருடைய இறுதிக்கிரியையில் பங்கேற்று அஞ்சலி உரை நிகழ்த்திய நண்பர்கட்கும் எமக்கு நேரில் வந்து ஆறுதல் அளித்தவர்களுக்கும் தொலைபேசியில் தொடர்புகொண்டு அனுதாபம் தெரிவித்தவர்கள், கண்ணீர் அஞ்சலிகள் அச்சிட்டோர், உணவு தந்து எம்மை ஆதரித்தவர்கள், எமது இல்லத்தில் கிரியைகள் திறம்பட நடாத்திய புரோகிதர்கள் மற்றும் இந்நூலை அச்சிட்டு உதவிய வேழன் பதிப்பகத்தினருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நன்றி


இங்ஙனம்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பிற்கு இலக்கணமாய்
அவனியில் வாழ்ந்து
பண்புடைமை காத்து
பக்குவமாய் வழி நடந்தீர்
இரக்கத்தின் இருப்பிடமாய்
ஈகை பல செய்து எல்லோருக்கும்
நல்லவராய் நாணயமாய் நடந்தீர்
ஏனோ இறைவன் இடை நடுவில்
பறித்து விட்டான்..
துன்புற்றோர் துயர் துடைத்து
துணைக்கரமாய் அடைக்கலம்
தந்த உம்மை
ஆண்டவன் ஏனழைத்தான்
பண்புள்ளோரை பல காலம்
வாழவிடக் கூடாதென்றோ?
என் செய்வோம்
இறைவன் சித்தம் இது
இனி காணமுடியாத சோகநிலையோடு
இங்கிருந்தே ஏங்கியழுகிறோம்.



வேழன் பதிப்பகம், கிளிநொச்சி. 021 228 5579

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org